1978 பிப்ரவரி 27]

திரு. துரை முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது எத்தனை நாளாக ஆய்வில் உள்ளது? எத்தனை இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்யப்பட்டிருக்கிறது? எப்பொழுதுதான் அது முடிக்கப்படும் என்பதை அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, முதலிலே ஒரு திட்டத்தை 1968 இல் தீட்டினர்கள். அதன்படி 1996 ஆம் ஆண்டு 20,000 மக்கள் தொகை இருக்க வேண்டும். ஆனல் இப்பொழுதே 24,000 மக்கள் தொகை வந்துவிட்டது. ஆகையினுல் மணிமுத்தாரிலிருந்து தண்ணீர் கொண்டுவர ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. அதற்கு இன்வெஸ்டிகேஷன் சார்ஜ்—ஆய்வுத் தொகை—ரூபாய் 27,200. விரைவிலே ஆய்வை முடித்து மேற்கொண்டு காரியங்கள் செய்யப்படும்.

சின்ன சேலத்திற்கு குடிநீர் வழங்கல்.

* 293. வின—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோமுகி அணைக்கட்டில் இருந்து சின்ன சேலம் பேரூராட்சிக்கு குடிதண்ணீர் கொண்டுவர அரசு முயற்சி ஏதேனும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இல்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, சின்ன சேலம் நகருக்கு நெடுநாட்களாகக் குடிநீர்ப் பஞ்சம் இருந்துகொண்டு வருகிறது. என்வே, கோமுகி அணைக் கட்டின் மேல் மட்டத்திலேயிருந்து சின்னசேலத்திற்குத் தண்ணீர் கொண்டு வர இருப்பதாக அறிகிறேன். அது எவ்வளவு விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் செலவில் ஆய்வில் எடுத்துக்கொண்டிருக்கிறேம். மிக விரைவில் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*294. வின—

மாயூரம் வட்டத்தில் குடியிருப்பு மனைகள் வழங்கல்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா —

மாயூரம் ஒன்றியம், நல்லத்துக்குடி பஞ்சாயத்தில் மனையற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு மனை வழங்கும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: நல்லத்துக் குடி கிராமத்தில் 32 அரிசனங்களுக்கு இலவச வீட்டுமனை வழங் கும் பொருட்டு தஞ்சை மாவட்ட ஆட்சியரின் செயற் குறிப்பை அரசு ஏற்று இதற்கான நில ஆர்ஜித சட்டத்தின் பிரிவு 4(1)-ன் முன் மொழிவு வெளியீட்டறிக்கையை தமிழ்நாடு அரசு 20—1—1978 தேதிய சிறப்பிதழில் வெளியிட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்த மாயூரம் ஒன்றியம் நல்லத்துக்குடி பஞ்சாயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் எத்தனை பேர் குடியிருப்பு மனை கோரி அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள்? இப்பொழுது வழங்கப்பட்டவர்கள் தவிர வேறு எத்தனைபேருக்கு வழங்க அரசு முயற்சி எடுக்க இருக்கிறது என்பதை அறிய விழைகிறேன்.

(முற்பகல் 9—50)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, 32 பேர் விண்ணப்பித்துக் கொண்டனர். 32 பேருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, அரசாங்கத்தால் இதுபோன்று தனியாரிடமிருந்து அரிசன மக்களுக்காக வீட்டு மனை இடங்கள் வாங்கப்பட்டு, தனிப்பட்ட முறையிலே, இது வரை பட்டா செய்து கொடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியிலே பல நூறு மக்கள் இவ்வாறு பெறுமல் இருக்கிறார்கள் இடங்களும் நிறைய இருக்கின்றன. ஆகவே, உடனடியாகப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவ ரவர்களே, எந்தெந்த ஊர், என்று பெயர்களைத் தருவாரானால் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயவுசெய்து எந்த ஊரைப்பற்றி மூலக் கேள்வி கேட்கப்படுகிறதோ, அந்த ஊரைப் பற்றித்தான் துணைக் கேள்வி கேட்கவேண்டும்.

295. வினா—

திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—